**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.194 நாள் : 09.06.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக இன்று (09.06.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட மங்களபுரம், கிருஷ்ணதாஸ் பிரதான சாலையில் உள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நூலகம், சுப்புராயன் தெருவில் உள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நூலகத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, படைப்பகத்தினைப் பயன்படுத்தி படித்து வரும் நபர்களிடம் கலந்துரையாடி தேவையான வசதிகள் குறித்து கேட்டறிந்தார். அவர்களின் கோரிக்கையின்படி படைப்பகத்தினைப் பயன்படுத்தும் நேரத்தினை அதிகரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, குளக்கரை சாலையில் ரூ.2.13 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தினார்.

பின்னர், சந்திரயோகி சமாதி சாலையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் தண்ணீர் வசதி, சுகாதாரப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கூடுதலான குடிநீர் வசதி ஏற்படுத்திட சென்னை குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இப்பகுதியில் உள்ள குழந்தைகள் மையத்தினைப் பார்வையிட்டு குழந்தைகள் மையத்தினை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, ஜமாலியா நகரில் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கூடிய வணிக வளாகம் கட்டடப் பணி மற்றும் பாஷ்யம் முதல் தெருவில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மையக் கட்டடம், ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பிக்கிள்பால் விளையாட்டுத் திடல் மற்றும் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மகளிர் உடற்பயிற்சிக் கூடம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு, பணிகள் அனைத்தும் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, மண்டல அலுவலர் திரு.ஜி.சொக்கலிங்கம் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**